# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (24.02.2016 முதல் 28.02.2016)

**அறிக்கை எண் : 016/2016** **தேதி: 23.02.2016**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 36°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 25°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 23°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 09°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தை (1.3 மி.மீ அளவு மழை கிடைத்தது) தவிர மற்ற மாவட்டங்களில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (24.02.2016 முதல் 28.02.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 32 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 24-02-16 | 0 | 36 | 23 | 3 | 75 | 32 | 11 | வட கிழக்கு |
| 25-02-16 | 0 | 36 | 23 | 3 | 75 | 32 | 11 | வட கிழக்கு |
| 26-02-16 | 0 | 36 | 23 | 3 | 75 | 32 | 11 | வட கிழக்கு |
| 27-02-16 | 0 | 36 | 23 | 3 | 75 | 32 | 11 | வட கிழக்கு |
| 28-02-16 | 0 | 36 | 23 | 3 | 75 | 32 | 11 | வட கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ பகல்நேர மற்றும் இரவுநேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால், நடவு செய்யப்பட்ட நவரைப் பருவ நெல் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சி வர வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு பாஸ்போமிடான் **(Phosphomidon)** 40 எஸ் எல் என்னும் மருந்தினை 600 மிலி அளவு 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ 60 நாட்கள் வயதுடைய முன்பருவ மற்றும் 30 நாட்கள் வயதுடைய மத்திய கால கரும்பு பயிருக்கு ஒரு எக்டருக்கு 91 கிலோ தழைச்சத்து மற்றும் 37 கிலோ சாம்பல் சத்து உரத்தினை மேலுரமாக இட்டு நீர் பாசனம் செய்யவும்.
- ✓ வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் **(TANUVAS smart)** தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். மேலும் சுத்தமான குடிநீரை போதிய அளவு வழங்கவும்.
- ✓ பகல் வெப்பநிலை மற்றும் காலை நேரக் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாலும் கால்நடைகளுக்கு வரக்கூடிய சப்பை நோயைக் கட்டுப்படுத்த 1.3.16 முதல் 31.3.16 வரை தடுப்பூசி கோயமுத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் போட இருப்பதால் கிராம கால்நடை மருத்துவரை உடன் அணுகவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ நடப்பட்ட நவரை நெல்லில் சாறு உறிஞ்சும் பூச்சி தாக்கினால், ஒரு எக்டருக்கு 600மிலி பாஸ்போமிடான் 40 எஸ் எல் மருந்தினை 500லி தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.